வல்லுநர்குழு மற்றும் ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை – வளர்ச்சி ஆணையம் அளித்துள்ள கருத்துகளின் அடிப்படையில்

பழைய ஓய்வூதியத் திட்டம் குறித்த கொள்கை முடிவு - அரசின் பரிசீலனையில் உள்ளது!

சட்டப்பேரவையில் - நிதித்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன் 28- சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், நிதி, எரிசக்தி, மனிதவள மேலாண்மை உள்ளிட்ட துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் தங்கம் தென்னரசு, "வல்லுநர் குழு - ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறை மற்றும் வளர்ச்சி ஆணையம் அளித்துள்ள கருத்துகளின் அடிப்படையில், பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்த அரசின் கொள்கை முடிவு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை வருமாறு:-

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு, தான் எழுதிய தெளிவுரை போலவே, சொல்லாற்றல் படைத்தவராக, சோர்வு என்பதே அறியாதவராக, அஞ்சா நெஞ்சம் கொண்டவராக, தன் வாழ்நாள் முழுக்க தனக்குரிய இடத்தைப் போராடிப்பெற்ற பெருவீரனாக விளங்கி, தன் மறைவிலும் தனக்கான இடத்தைப் போராடியே பெற்றுகொண்ட போர்ப்படைத் தலைவன்; (மேசையைத் தட்டும் ஒலி) எந்நாளும் எங்களுடைய பாட்டுடைத் தலைவன், தலைவர் கலைஞர் துயிலும் இடம்நோக்கி, நான் தொழுகிறேன்.

நின்ற தேர்தல்கள் யாவினும் வெற்றி கொடி நாட்டிய மகத்தான தந்தைக்குத் தப்பாமல் பிறந்த தனயனாக, தான் பொறுப்பேற்ற நாள்முதல், தான் கண்ட களங்கள் எல்லாவற்றிலுமே (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தை தன் அயராத உழைப்பினால் வெற்றிமுகட்டிற்கு அழைத்துச் சென்று, தமிழ்நாட்டின் வரலாற்றில் என்றும் அழியாத ஒரு சாதனை சரித்திரத்தை படைத்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கம்.

ஜி.எஸ்.டி. வரிப் பகிர்வை ஒன்றிய அரசு நிறுத்தி இருப்பதால் தமிழ்நாட்டிற்கு 20 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது!

மல்லிகை போன்ற மெல்லிய மனது; ஆனால், எஃகு போன்ற உறுதியான உள்ளம். எதிர்கொண்ட பகை யாவையும் தூள் தூளாக்கி களமாடும் கம்பீரத் தலைவர் எங்களுடைய தலைவர் அண்ணன் முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றிகலந்த வணக்கம்.

அறம்கூறும் அவையினுடைய முன்னவர், அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலான நெடிய சட்டமன்ற அனுபவத்திற்குச் சொந்தக்காரர், கழகத்தினுடைய பொதுச்செயலாளர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.

கங்கைகொண்ட சோழனின் பேரன் என்பது தனக்குரிய பெருமையே என்றாலும், சுங்கம் தவிர்த்த சோழன் என வரலாற்றில் தனக்கென்று ஒரு தனி முத்திரையை பதித்துக்கொண்ட குலோத்துங்கச் சோழன் போல, பெரும்புகழ் பெற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கு பேரனாக, ஒரு பெரும் பாரம்பரியத்திலே வந்திருக்கக்கூடிய தரணி போற்றும் ஒரு தந்தைக்கு தனையனாக இருந்தாலும், இன்றைக்கு தணையாத அயராத உழைப்பால் தனக்கென ஒரு தனிப் புகழ் கொண்டு கழகப் பணியும், அமைச்சர் பணியும் ஒருங்கே ஆற்றும் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அன்பான வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கருத்தாழமிக்க சொல்லாடல்களோடு சுவைபட இந்த அவையை ஜனநாயக மரபுகளின்படி நடத்திச்செல்லும் பேரவைத் தலைவரான தங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு வீற்றிருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களுக்கும், முன்வரிசை தலைவர்களுக்கும், சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை இந்த மாமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்துள்ள திருச்சுழி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், நான் சார்ந்துள்ள விருதுநகர் மாவட்ட மக்களுக்கும், என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த மாமன்றத்தில் வைத்திருக்கக்கூடிய நிதித் துறை, மனிதவள மேலாண்மைத் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, எரிசக்தித் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் உள்ளிட்ட மானியக் கோரிக்கை மீதான விவாதங்களில் நம்முடைய உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி, இரா. மாணிக்கம், எஸ்.ராஜகுமார், எஸ்.பி. வெங்கடேஷ்வரன், இ.கருணாநிதி, திருமதி வானதி சீனிவாசன், க.சொ.க. கண்ணன் ஆகியோர்கள் கலந்துகொண்டு தங்களுடைய நல்ல கருத்துகளையெல்லாம் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர்கள் பேசுகின்ற பொழுது, தங்களுடைய பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்கின்றபொழுது சில கோரிக்கைகளையும் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். உதாரணமாக நம்முடைய உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஷ்வரன் பேசுகின்றபொழுது, தருமபுரியில் எம்.ஜி.ஆர். நகர் ரேஷன் கடைகளில் மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற நீர்நிலை புறம்போக்கு இடங்களில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு, உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படியும், தாசில்தாரின் தடையில்லாச் சான்றும் வழங்க இயலாத காரணத்தினாலும் அந்த மின் இணைப்பு வழங்கப்படுவது நிலுவையில் இருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். இதுதவிர மற்றப் பகுதிகளில் எல்லாம் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, நம்முடைய குளித்தலை தொகுதி குறித்து பேசிய நம்முடைய உறுப்பினர் இரா. மாணிக்கம் சுட்டிக்காட்டியதைப் போல, அய்யர் மலைக்கு அருகிலே சின்னப்பனையூர் என்ற பகுதியில் 110/11 KV துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட துணை மின் நிலையப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சூரிய மின் நிலையங்கள்!

உறுப்பினர் க.சொ.க. கண்ணன் இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டதைப் போல பொய்யூரிலிருந்து ஜெயங்கொண்டம் பகுதிக்கு மாற்று வழியில் மின்சாரம் வழங்க second source 110 KV மின்பாதையில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் இருக்கிறது, விரைவிலே அது செயலாக்கத்திற்கு வரும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய திருமதி வானதி சீனிவாசன் பேசுகின்றபொழுது, PM Surya Ghar திட்டம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 11,722 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 3,472 சூரிய மின் நிலையங்கள் நிறுவப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள பணிகள் முடிவுறும் பட்சத்தில் இணைப்புகள் அவர்களுக்கு கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பிரதம மந்திரியினுடைய வீடு வழங்கும் திட்டத்தில், PM-KUSUM திட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய 11 megawatt திறனுக்கான கருத்துருக்கள் முடிவுற்று இப்போது ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. பரவலாக்கப்பட்ட Decentralised Ground Maintenance project திட்டத்தில் 3 megawatt திறன் நிலையம் அமைப்பதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, அந்தத் திட்டமும் இப்போது நடைமுறையில் இருக்கிறது என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் மானியக் கோரிக்கையில் இருக்கக்கூடிய கருத்துகளுக்குச் செல்வதற்கு முன்பாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த 22 ஆம் தேதி டெல்லி மாநகரத்தில் நம்முடைய ஒன்றிய நிதி அமைச்சர் கூட்டியிருந்த மாநில நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பை பெற்றிருந்தேன். அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, நான் தமிழ்நாடு அரசின் சார்பில் எடுத்து வைத்திருக்கூடிய கருத்துகளையும் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டம்!

நான் பலமுறை இந்த அவையிலே சுட்டிக் காட்டியிருந்தாலும்கூட, மீண்டும் ஒரு முறை இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விவாதங்களினுடைய பின்னணியில் நான் இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது, குறிப்பாக இங்கே விவாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சென்னை மெட்ரோ இரயில் திட்டம். அந்தத் திட்டத்திற்கு 2022, 2023 ஆம் ஆண்டினுடைய வரவு செலவுத் திட்ட உரையில் ஒன்றிய நிதி அமைச்சர், சென்னை மெட்ரோ இரயிலுக்கான இரண்டாம் கட்டத் திட்டப் பணிகளுக்கு ஏறத்தாழ 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் செலவில் ஒன்றிய அரசு திட்டமாக நடைபெறுவதாக அறிவித்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து 21-11-2020 அன்று சென்னையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இந்தத் திட்டம் 17-8-2021 அன்று திட்ட முதலீட்டு வாரியத்தால் PIB பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும்கூட பொருளாதார விவகாரங்களுக்கான ஒன்றிய அமைச்சரவையின் Cabinet Committee on Economic Affairs (CCEA) ஒப்புதலுக்காக கடந்த 3 ஆண்டுகளாக அது காத்திருக்கிறது. நம்முடைய மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்காத அதேவேளையில், ஏற்கெனவே CCEA clearance-க்காக 3 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கக்கூடிய அதேவேளையில், ஒன்றிய அரசு, 2022 ஆம் ஆண்டு நாக்பூர் மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கும், கொச்சி மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளித்திருக்கிறது; 2023 ஆம் ஆண்டு குருகிராம், புனே மெட்ரோ இரயில் திட்டத்திற்கு அது ஒப்புதலளித்திருக்கிறது.

நம்முடைய மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கான ஒப்புதல் நிலுவையில் இருக்கக்கூடிய நிலையிலும்கூட, நம்முடைய முதலமைச்சர், இந்தத் திட்டத்திற்கான முழுச் செலவினத்தையும் நமது தமிழ்நாட்டின் சொந்த மாநில நிதியிலிருந்து (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கொண்டிருக்கிறார். இந்தத் திட்டத்திற்கான முழுச் செலவினத்தையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தால், தமிழ்நாடு அரசிற்கு மிகக் கடுமையான நிதிச் சுமை தற்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தவொரு நியாயமற்ற செயலினால், மாநில அரசுக்கு இந்த வருடம் மட்டும் ஏறத்தாழ 12,000 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக இந்த ஆண்டு நம்முடைய அரசு 12,000 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறது. ஒன்றிய அரசு, ஒருவேளை நாம் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய வகையில் இத்திட்டத்திற்கான நிதியை வழங்கியிருக்குமேயானால், நம்முடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருக்குமேயானால், நியாயத்திற்கு செவிசாய்த்திருக்குமேயென்றால், இந்த 12,000 கோடி ரூபாயை நாம் நம்முடைய சொந்த நிதியிலிருந்து இந்தத் திட்டத்திற்கு செலவழிக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது.

நான் பேரவையில் இருக்கக்கூடிய உறு7ப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர்கள் எல்லோரும் பல்வேறு திட்டங்களை கேட்கிறீர்களே! நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன்; மாறாக இந்த 12,000 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்காக செலவழிப்பதற்குப் பதிலாக அரசினுடைய மற்ற திட்டங்களுக்கெல்லாம் நாம் ஒதுக்கீடு செய்து செலவழிந்திருந்தால், அதன்மூலமாக 25,000 புதிய பேருந்துகளை நாம் வாங்கியிருக்கலாம்; நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய பேருந்துகளின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தியிருக்கக்கூடிய வாய்ப்பை நாம் பெற்றிருக்க முடியும். அதேபோன்று 30,000 கிலோ மீட்டர் தூரத்திற்கு நாம் கிராமச்சாலைகளை அமைத்து முடித்திருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர், 4,000 கோடி ரூபாய் செலவில் 10,000 கிலோ மீட்டர் சாலைகள் அமைக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார் என்றால், அந்த 10,000 கிலோ மீட்டர் சாலை என்பது 30,000 கிலோ மீட்டர் சாலையாக உயர்ந்து, நீங்கள் கேட்கக்கூடிய அத்தனை இடங்களிலும் சாலைகள் அமைக்கக்கூடிய வாய்ப்பை தமிழ்நாடு அரசு பெற்றிருக்க முடியும். அதேபோன்று 3 இலட்சம் வீடுகளை நாம் புதிதாகக் கட்டியிருக்க முடியும். 50,000 புதிய வகுப்பறைகளை நம்முடைய பள்ளிகளிலே நாம் உருவாக்கியிருக்க முடியும். ஆக இந்த 12,000 கோடி ரூபாயை நாம் இழந்திருக்கிறோமோமென்றால்; இல்லை, இத்தனை திட்டப் பணிகளையும் அதனுடன் சேர்த்தே நாம் இழந்திருக்கிறோம் என்பதை இந்த நாட்டு மக்களுக்கும், இந்த அவைக்கும் நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

பேரிடர் மேலாண்மை நிதி!

அதேபோன்று பேரிடர் மேலாண்மை நிதி; கடந்த ஆண்டு ஏற்பட்ட மிக்ஜாம் புயலாக இருந்தாலும் சரி, அதற்குப் பிறகு வந்த தென்மாவட்ட வெள்ளமாக இருந்தாலும் சரி, அதற்கெல்லாம் நாம் எவ்வளவு ரூபாய் நிவாரணத் தொகை கேட்டிருந்தோமென்றால், ஏறத்தாழ 37,906 கோடி ரூபாயை நாம் அவர்களிடத்திலிருந்து நிவாரணத் தொகையாக கேட்டிருக்கிறோம். ஆனால், ஏறத்தாழ 38,000 கோடி ரூபாயை நாம் கேட்கிறபோது, ஒன்றிய அரசு நமக்கு கொடுத்திருக்கக்கூடிய தொகை என்பது 276 கோடி ரூபாய்தான்; வெறும் 276 கோடி ரூபாய்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது.

மாநில அரசுகள் தங்களுடைய வரி விதிக்கக்கூடிய அதிகாரங்களை விட்டுக் கொடுத்திருக்கிறது. ஆனால் 30-6-2022-க்குப் பிறகு இனிமேல் அந்த வரியை நமக்குக் கொடுக்க முடியாது என்று ஒன்றிய அரசு இழப்பீட்டை நிறுத்தியதன் காரணமாக ஏறத்தாழ 20,000 கோடி ரூபாய் நமக்கு இன்றைக்கு வரவேண்டியிருக்கிறது. நீங்கள் எப்படியாவது நான் கேட்டுக்கொள்வேன், ஒன்றிய அரசிடம் பேசுங்கள்; தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய பணம் நமக்கு வந்துவிட்டால், நீங்கள் அந்த 100 பூக்களை சரியாக எண்ணி வைத்துவிட்டால், அம்பிகாபதி சாக வேண்டியதுமில்லை, அமராவதி அழக வேண்டியதுமில்லை. அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அங்கேயிருந்து வர வேண்டும்.

காரணம் என்னவென்றால், எப்படி உத்தர பிரதேசத்தில் நம்மைவிட்டு மேலே செல்கிறார்கள் என்று நீங்கள் வருத்தப்பட்டீர்கள். உத்தர பிரதேசம் நமக்கு மேலே போகிறது; உத்தர பிரதேசத்திற்கு பின்னால் நாம் போகிறோம் என்று சொன்னால், சூத்திரதாரி யார் என்பதை நீங்களே புரிந்துக்கொள்வீர்கள். யார் கயிறை இழுக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய திட்டங்களையெல்லாம் உத்தர பிரதேசத்திற்குச் செல்வதற்கு யார் காரணம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்களும் அறிவோம்; நாங்களும் அறிவோம்; இங்கே இருக்கக்கூடிய நாட்டு மக்களும் அறிவார்கள். இந்த GST-ஐப் பொறுத்த மட்டில், நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான வரியை நீங்கள் பெற்றுத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி, நீங்கள் பேசும்போது cess பற்றி சொன்னீர்கள். வரி விகிதம் devolution-ல் கொடுப்பதாகச் சொன்னீர்கள். Devolution-ல் நீங்கள் கொடுக்கிறீர்கள். அதனை நான் மறுக்கவில்லை. ஆனால் Devolution-ல் வரக்கூடிய வரி பகிர்வுக்கு மேலாக வரக்கூடிய cess; இதற்கு மேலாக இருக்கக்கூடிய கூடுதல் மேல் வரி உள்ளிட்ட கூடுதல் கட்டணங்கள்-இந்தக் கட்டணங்கள் 2011-12 ஆம் ஆண்டு 10.4 சதவிகிதம்தான். ஆனால் 2022-23 ஆம் ஆண்டில், இந்த cess, அதில் இருக்கக்கூடிய கூடுதல் கட்டணங்கள் மட்டும் எடுத்துக்கொண்டால், 20.28 சதவிகிதமாக அது உயர்ந்திருக்கிறது. ஆகையால், நீங்கள் devolution-ல் கொடுக்கிற மாதிரி கொடுக்கிறீர்கள், ஆனால் அதற்கு மேல் வரக்கூடிய மேல் வரி கட்டணமும் நேரடியாக ஒன்றிய அரசாங்கம் 20 சதவிகிதத்திற்கு மேலாக அது வரைமுறையின்றி பயன்படுத்துவதன் மூலமாக மாநில அரசாங்கத்திற்கு வரக்கூடிய இந்த வருவாயின் பங்கு என்பது மிகப் பெரிய அளவிலே குறைந்திருக்கிறது. எனவே, இந்த வரி பகிர்விலே, நியாயமான பங்கை கொடுக்கக்கூடிய வகையிலே, வரி விதிப்பிற்கான அடிப்படை விகிதங்களிலே இந்த மேல் வரியையும், இந்த கூடுதல் கட்டணங்களையும் அடிப்படையாக இருக்கக்கூடிய அந்த வரி விகிதங்களிலே ஒன்றிய அரசு இணைக்க வேண்டுமென்பதை நான் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன்.

திட்டங்களுக்கான நிதியைக் குறைத்துக் கொடுக்கிறார்கள்!

இன்னொன்று, பல திட்டங்கள் குறித்து சொன்னார்கள். ஒன்றிய அரசு இந்தந்தத் திட்டங்களையெல்லாம் கொடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். ஒன்றிய அரசாங்கம் திட்டங்களுக்கு பணம் கொடுக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், தொடர்ச்சியாக என்ன செய்கிறீர்கள். ஒன்றிய அரசு நமக்கு கொடுக்கக்கூடிய அவர்களுடைய பங்களிப்பைக் குறைத்துக்கொண்டே வருகிறார்கள். Sarva Shiksha Abhiyan திட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு காலத்தில் ஒன்றிய அரசினுடைய பங்கு 75 சதவிகிதம்; நம்முடைய பங்கு 25 சதவிகிதம். அதன்பிறகு 60:40 என்ற விகிதத்தில் கொண்டு வருகிறார்கள். நம்முடைய பங்களிப்பு உயர்ந்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய பங்களிப்பு குறைந்துக் கொண்டிருக்கிறது.

இன்னும் ஒன்றைக்கூட நான் சொல்வேன். பிரதம மந்திரி வீடு வசதி நகர்ப்புற திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசு வீடு ஒன்றிற்கு ஒன்றரை இலட்சம் ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆனால், தமிழ்நாடு அரசு ஒரு வீட்டிற்கு 12 முதல் 14 இலட்சம் ரூபாய் தனது பங்களிப்பாக வழங்குகிறது. அதேபோல், கிராமப்புற திட்டத்தின்கீழ் நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால், வீடு ஒன்றிற்கு நம்முடைய ஒன்றிய அரசு ரூ.72,000 வழங்கக்கூடிய நிலையில், மாநில அரசு வீடு ஒன்றிற்கு 1.68 இலட்சம் ரூபாயை தங்கள் பங்களிப்பாக வழங்கிக் கொண்டு வருகிறது. அதேபோல், முதியோர் ஓய்வூதியத் திட்டம், விதிவைகள் மறுவாழ்விற்காக இருக்கக்கூடிய திட்டங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களுக்கெல்லாம் நீங்கள் 200 ரூபாய், 300 ரூபாய் என்றளவில்தான், நம்முடைய ஒன்றிய தனது பங்களிப்பை தந்து கொண்டிருக்கக்கூடிய நிலையில் நம்முடைய மாநிலத்தில், நம்முடைய முதலமைச்சர் இந்தத் தொகையை உயர்த்தி, இந்த வகையைச் சார்ந்த ஒவ்வொரு பயனாளிக்கும் மாதாந்திர ஓய்வூதியமாக 1,200 ரூபாய் வழங்கக்கூடிய முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சராக இருக்கிறார்கள். இந்தத் தேவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசு தான் அளிக்கக்கூடிய அந்தப் பங்களிப்புத் தொகையினை அதிகரித்து, ஒன்றிய அரசு நிதியுதவி வழங்கக்கூடிய திட்டங்களில் குறைந்தபட்சம் 50 சதவிகித பங்களிப்பை வழங்க வேண்டுமென்று நான் அந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியிருக்கிறேன்.

மின் பகிர்மான நிறுவனங்களின் இழப்புகள்!

மாநில திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்யும்போது, அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே வரைமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் ஒன்றிய அரசு பின்பற்றக் கூடாது. அதேபோல் நீங்கள் ஒவ்வொரு மாநிலத்திருக்கக்கூடிய பிரச்சினைகளின் அடிப்படையில் அதனை செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அதேபோல், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்காக நம்முடைய ஒட்டுமொத்தமான உள்நாட்டு உற்பத்தி மதிப்பு GSDP-ல் 0.5 சதவிகிதம் கூடுதல் கடன் பெறுவதற்கான அந்த நிபந்தனைகளில் ஒன்றாக, ஒவ்வோர் ஆண்டும் மின் பகிர்மான நிறுவனங்கள் DISCOM-னுடைய இழப்புகளை வரையறுக்கப்பட்ட சதவிகிதத்தில் மாநிலங்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஒன்றிய அரசாங்கம் அதை வலியுறுத்துகிறது. ஒரு வேளை, இந்தத் தொகை நாம் DISCOM-க்காக அந்த இழப்பீட்டுத் தொகை நாம் வழங்கவில்லை என்று சொன்னால், மாநிலங்கள் நாம் பெறக்கூடிய கடன் உச்சவரம்பு தொகையிலிருந்து ஒன்றிய அரசே கழித்துக்கொள்ளக்கூடிய ஒரு நிபந்தனை விதித்திருக்கிறார்கள்.

அனைவருக்கும் தடையற்ற சீரான மின் விநியோகம்! மின் தேவை உச்சத்தை எட்டியுள்ள போதும் தமிழ்நாடு மின்சார வாரியம் சிறப்பாகச் செயல்படுகிறது!

இதன் காரணமாக இந்த வருடம் 2024-2025 ஆம் ஆண்டிலே 30 ஆயிரம் கோடி ரூபாயினை நாம் கடன் வாங்குகிற நிகழ்வு ஏற்படுவதாக வைத்துக்கொண்டால், நாம் DISCOM-க்காக, மின் பகிர்மான நிறுவனங்களுக்காக 52 ஆயிரம் கோடி ரூபாய் நாம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வந்துள்ளது. நாம் வாங்கக்கூடிய தொகை 30 ஆயிரம் கோடியாக இருந்தால், DISCOM-க்காக கொடுப்பது 52 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தால், இந்த நிபந்தனைகளால் 22 ஆயிரம் கோடி ரூபாயினை அதிகமாக செலுத்துவதற்கு நமது தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதைப்போல, பெரிய அளவிலான உட்கட்டமைப்பு திட்டங்களிலும், நமக்கு அனுமதி வழங்குவதை பொறுத்த மட்டிலே, ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து வருவதையும் அந்தக் கூட்டத்திலே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். எனவே, நமக்கான புதிய திட்டங்கள், புதிய இரயில்வே திட்டங்கள், புதிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு இந்த வரவுச் செலவுத் திட்டத்திலே தமிழ்நாட்டிற்கு அதிகமான நிதியையும், திட்டங்களையும் ஒதுக்கித் தரவேண்டுமென்று அந்தக் கூட்டத்திலே நான் வலியுறுத்தியிருக்கிறேன் என்பதையும் நான் தெரிவித்துள்ளேன்.

அதைப்போல, அன்று மாலை நடைபெற்ற GST Council meeting-லயும் நான் பேசுகிறபோது, சரக்கு மற்றும் சேவை வரி நிலுவைக்காக வட்டி மற்றும் அபாராதத்தை தள்ளுபடி செய்யவேண்டுமென்ற வணிகர்களின் கோரிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசினுடைய சார்பில் நம்முடைய ஆதரவினை நான் தெரிவித்திருக்கிறேன்.

அதைப்போல தமிழ்நாட்டினுடைய நுகர்வோர்களும், வெளிமாநில வணிகர்களும், ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள சரக்குகள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்யும்போது, வெளிமாநில வணிகர்கள் மாதாந்திர வரி விவர அறிக்கைகளில் தமிழ்நாட்டினை குறிப்பிட்டு, ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மாநிலத்தின் பங்கை பெறும் வகையிலான சட்டத் திருத்தத்திற்கு நாம் ஆதரவு தெரிவித்துள்ளோம். குறிப்பாக, GST Council-யை பொறுத்தவரையில், நாம் கூட்டாட்சி தத்துவத்திற்கு முக்கியம் தரவேண்டுமென்பதையும் கூட்டத்திலே நான் வலியுறுத்தியிருக்கிறேன்.

தலை சிறந்த பொருளாதார வல்லுநர் குழு!

மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, இல்லம் தேடிக் கல்வி ஆகிய திட்டங்களுக்கும், நம்முடைய தமிழ்நாட்டினை 2030 ஆம் ஆண்டுக்குள் One Trillion Dollar Economy ஆக மாற்றக்கூடிய அந்த வழிகள், மின் துறையிலான சீர்திருத்தங்கள் போன்ற பல்வேறு திட்டங்களுக்கும் இந்தக் குழு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

இந்தக் குழுவிலே நம்முடைய டாக்டர் அரவிந்த் சுப்ரமணியன் தலைமையில், எரிசக்தி மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி துறையின்-GST செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கான ஒரு துணை குழுவையும் நாம் இந்த முறை அமைத்திருக்கிறோம். அதைப்போல, PFTS-பொது நிதி கண்காணிப்பு அமைப்பானது, 13 துறைகளின் 36 முக்கிய திட்டங்களின் நிதியினை விடுவிப்பதிலிருந்து, பயனாளிகளுடைய வங்கி கணக்கில் அந்த நிதி நேரடியாக செல்லக்கூடிய நிலையில் கண்காணிப்பு செய்திருக்கிறோம். கருவூலத்திலிருந்து நேரடியாக நிதி விடுவிக்கக்கூடிய நுட்பமானது, 17 துறைகளின் 59 திட்டங்களில் இப்போது செயல்பாட்டில் இருக்கிறது. நிதியானது, கருவூலத்திலிருந்து ஒப்பந்ததாரருக்கு நேரடியாக செல்கின்ற நிலை உருவாகிறபோது, அரசினுடைய திட்டங்கள் எந்தளவிற்கு வேகமாக செயல்படுகிறதோ, அந்தளவிற்கு நிதியினை ஒதுக்கக்கூடிய மற்றும் விடுவிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியும்.

அரசும் தேவைக்கு அதிகமாக கடன் வாங்காமல், வட்டி செலவினத்தை குறைத்து கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதைப்போல, நிதித் துறையில் நிதி தரவு பகுப்பாய்வு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம், GST, சமூக நலன், கல்வி, மருத்துவ சுகாதாரம், ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகிய முக்கிய வளர்ச்சி திட்டங்கள்மூலம் பெறப்படும் முக்கிய தகவல்களை ஒருங்கிணைத்து அவற்றை பொருளாதார குறியீடுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்வது இதன் முக்கிய நோக்கமாக இருக்கிறது. இதனை செவ்வனே கண்காணிப்பதன் மூலமாக நடுத்தர கால நிதி மேலாண்மையினை நாம் திறம்பட செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு வந்துள்ளது.

மின் கொள்முதல்!

அதேபோல, மின் கொள்முதல், e-procurement-ஐ பொறுத்தமட்டில் 1-4-2023 அன்று புதுப்பிக்கப்பட்ட இணையதளம் வழியாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். 2023-2024 ஆம் நிதியாண்டில், 1.69 இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள 1.75 இலட்சம் எண்ணிக்கையிலான ஒப்பந்தப்புள்ளிகள் இதிலே பெறப்பட்டிருக்கிறது. இது மின்னணு வங்கி உத்தரவாதம் முறையையும் இதிலே அரசு நம்பிக்கைபட்டிருக்கிறது. எனவே, இதுவொரு மிக முக்கியமான முன்னெடுப்பாக இந்த e-procurement-லே தமிழ்நாடு அரசினுடைய பணியைச் செய்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்!

அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், United India Insurance Company Limited மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள், பணியாளர்கள் போன்ற தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.5 இலட்சம் வரை புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்மூலம் கட்டணமில்லாத சிகிச்சை வழங்கப்படுகிறது. அதிலே இருக்கக்கூடிய பணியாளர்கள் தங்களுடைய அடையாள அட்டையினை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அதேபோல, அவர்களுடைய மருத்துவ செலவிற்கான கோரிக்கைகளின் நிலையை அறியக்கூடிய அளவிற்கு mobile application ஒன்று தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அரசு மருத்துவமனைகளிலும் தொடங்கி வைப்பதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை இன்னும் revise செய்து--இந்தத் திட்டத்திலே சில குறைபாடுகள் இருப்பதாக அரசு ஊழியர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதையும் நிவர்த்தி செய்து, புதிய அளவிலே சிகிச்சைகளை செய்வதற்கும், புதிய இடங்களிலே அந்த சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான மருத்துவமனைகளை உருவாக்குவதற்கும், காப்பீட்டுத் தொகையினுடைய வரம்பை உருவாக்குவதற்கும் நம்முடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

‘களஞ்சியம்’ கைபேசி செயலி!

கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறையினுடைய பணிகளையும் நவீனமயமாக்கி இருக்கிறோம். ஊழியர்கள் அந்தப் பணியிலே சேர்ந்திருக்கக்கூடிய நாள் முதல் ஓய்வு பெறக்கூடிய நாள் வரை, அதேமாதிரி ஓய்வுக்குப் பின்பு வரக்கூடிய பணப் பலன்களின் அனைத்து பரிவர்த்தனைகளும் கணினிமயமாக்கப்பட்டு, நேரலையிலே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிலே குறிப்பாக, பணியாளர்கள் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ‘களஞ்சியம்’ என்கிற ஒரு கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் வாயிலாக பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பயனாளர்கள் இனிமேல் அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல், அவற்றை இருந்த இடத்திலிருந்தே செய்து கொள்ளக்கூடிய ஒரு திட்டத்தையும் தந்திருக்கிறோம்.

இந்த நிதித் துறையைத் தாண்டி மனிதவள மேலாண்மைத் துறை என்பது--உங்களுக்கெல்லாம் தெரியும். பொதுத் துறையிலிருந்து ஒரு புதிய ஒருங்கிணைந்திருக்கக்கூடிய துறையாக பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை 1976 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. பயிற்சித் துறையானது தாய் துறையோடு இணைக்கப்பட்டு, மனிதவள மேலாண்மைத் துறையிலே மாற்றம் கண்டிருக்கிறது. அரசுத் துறை பணியாளர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே கணித்தல், மனிதவளம் தொடர்பான வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றுதல், கண்காணித்தல், அரசுப் பணிக்கான உரிய நபர்களைத் தேர்ந்தெடுத்தல், பயிற்சி அளித்தல், சட்டப்பூர்வ பணிகள், நிர்வாகப் பணிகள் போன்றவற்றையும், அரசுப் பணியாளர் தேர்வாணையம், விழிப்புப் பணி ஆணையம், போட்டித் தேர்வு ஆணையம், சென்னை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, பவானிசாகர் அரசு அலுவலர்கள் பயிற்சி நிறுவனம், லோக் ஆயுக்தா போன்ற பணிகளையும் மனிதவள மேலாண்மைத் துறை மிகச் சிறப்பாகச் செய்கிறது.

எரிசக்தித் துறை. மிக முக்கியமான ஒரு துறை. பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துகளை பகிர்ந்து கொண்டிருக்கக்கூடிய துறையாக இந்தத் துறை இருக்கிறது. நம்முடைய அன்றாட வாழ்வினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய மிக முக்கியமான ஒரு துறை இந்த எரிசக்தித் துறை. மின்சாரம் அதிலே மிக முக்கியமாக பங்கு வகிக்கிறது. நம்முடைய வீடுகளுக்கான தேவைகளையும் தாண்டி தொழில் வளர்ச்சி, போக்குவரத்து போன்றவற்றிலும் எந்தவிதமான குறைபாடும் இல்லாத வகையில், மின்சாரங்களை வழங்குவதற்கான நோக்கில் மின்சார வாரியம் தன்னுடைய பணிகளை மிகச் சிறப்பாக செய்து வந்திருக்கிறது.

மின் தேவையைப் பொறுத்தமட்டிலே, தமிழ்நாட்டில் முன்எப்போதும் இல்லாத அளவில் மொத்த மின் தேவையானது, 20,830 megawatt என்கின்ற உச்சத்தை கடந்த மே மாதம் 2 ஆம் தேதி நாம் எட்டியிருக்கிறோம். அதிகபட்சமான மின் நுகர்வை இன்றைக்கு consumers அந்த மின் நுகர்வை consume செய்திருக்கிறோம் என்று சொன்னால், கடந்த 30-4-2024 அன்று 454.32 million unit-களை நாம் consume செய்திருக்கிறோம். பொதுவாக மின் தேவை என்பது, நமக்கு மிக அதிக பட்சமாக ஒரு 17,000 megawatt வரை நாம் போகக் கூடிய ஒரு நிலையில் இந்த மே மாதம் மட்டும் நாம் 20,000 megawatt தொட்டிருக்கக் கூடிய அளவிலே (மேசையைத் தட்டும் ஒலி) நாம் இந்த megawatt-ஐ செய்திருக்கிறோம். சென்னையைப் பொறுத்தமட்டில் பார்த்தீர்களானால், இதை நான் தமிழ்நாட்டிற்குச் சொன்னேன். அதிகபட்சமாக மின் தேவை கடந்த மே மாதம் 31 ஆம் தேதி 4,769 megawatt-ஆகவும், மின் நுகர்வானது 101.75 million unit-ஆகவும் வந்திருக்கிறது. ஆக 4,769 megawatt சென்னையினுடைய மின் தேவை இருந்திருக்கிறது என்று சொன்னால், ஒரு ஒப்பீட்டுக்காக நான் உங்களுக்கு சொல்வேன்.

சென்னை மாநகர மின் தேவை!

ஒட்டுமொத்த கேரளா மாநிலத்திற்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படுகிறதோ, அந்த மின்சாரம் என்பது சென்னை மாநகரத்தினுடைய தேவைக்கு மாத்திரம் இன்றைக்குத் தேவைப்படுகிறது. ஒரு மாநிலத்திற்குத் தேவையான மின்சாரம் மட்டும் சென்னை மாநகரத்திற்கு இன்றைக்குத் தேவையாக இருந்திருக்கிறது. நான் குறிப்பாக இங்கே உங்களுக்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால், இவ்வளவு பெரிய நமக்கு ஓர் demand வந்திருக்கக்கூடிய இந்த நேரத்திலும் நமக்கு இருக்கக்கூடிய மிகப்பெரிய நெருக்கடியை நம்முடைய summer-ல் கோடைகாலத்தில் வந்திருக்கக்கூடிய அளவிலும், மிகப்பெரிய மின்நுகர்வு இருந்த நேரத்திலும், மிகப்பெரிய மின் தேவை இருந்தபோதிலும், எந்த இடத்திலும் தடை என்று ஏற்பட்டுவிடாமல் அனைவருக்கும் தடையற்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சீரான மின்சார விநியோகத்தை நம்முடைய மின்சார வாரியம் மிகச்சிறப்பான வகையிலே இந்த முறை வழங்கியிருக்கிறது என்பதை நான் இங்கே உங்களிடத்திலே பெருமையோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்